**சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

முன்னிலை: திரு. M. சண்முக கனி பி.ஏ., எல்.எல்.பி.,

சார்பு நீதிபதி, மானாமதுரை

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21–ம் நாள் செவ்வாய்க்கிழமை

**அசல் வழக்கு எண். 155/2025**

**(CNR No. TNSV140002622025)**

கனரா வங்கி
மானாமதுரை கிளை
அதன் கோட்ட மேலாளர் மூலம் ...வாதி

//எதிர்//

1. K. கொங்கேஸ்வரன்
2. K. கருணாநிதி ...பிரதிவாதிகள்

இவ்வழக்கு கடந்த 17.04.2026ம் தேதி இறுதியாக என் முன்பு விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு வாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. M.ராமகிருஷ்ணன் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லை என்பதால் 1ம் பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்திரவு பிறப்பிக்கப்பட்டும், 2ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு .A. கதிரவன் அவர்கள் முன்னிலையாகியும், வழக்கு கோப்புகளை பரிசீலித்தும், இரு தரப்பு வாதுரையை கேட்டறிந்த பின்பும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**தீர்ப்புரை**

வாதி வங்கி தரப்பில் பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா தொகை ரூ.5,23,410/–ம் அதற்கு தாவா தாக்கல் செய்த தேதியிலிருந்து தொகை

செலுத்தி தீரும் தேதி வரை வருடத்திற்கு 10.95 % பின்வட்டி மற்றும் வழக்கின் செலவுத் தொகையை பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு செலுத்த உத்திரவிட கோரி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம்:-**

1ம் பிரதிவாதியின் படிப்பு செலவிற்காக 1, 2 பிரதிவாதிகள் கல்வி கடன் கோரி 04.09.2015–ஆம் தேதி வாதி வங்கியிடம் விண்ணப்பித்துள்ளார்கள் என்றும், வாதி வங்கியானது ஆவணங்களை பரிசீலனை செய்து, கல்வி கடன் ரூ.2,16,000/– வழங்க 04.09.2015 ம் தேதி வாதி வங்கி அனுமதி வழங்கியது என்றும், பிரதிவாதிகள் கடனுக்காக 04.09.2015 ம் தேதி வாதி வங்கிக்கு கல்வி கடன் ஒப்பந்தம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றும், அந்த ஆவணத்தில் மேற்படி கடன் தொகைக்கு வருடம் ஒன்றுக்கு 11.40% வட்டியை செலுத்துவதாக ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்றும், ஒப்பந்தப்படி பிரதிவாதிகள் கடன் கூடுதல் தொகையை திரும்ப செலுத்தவில்லை என்றும், வாதி வங்கி பராமரித்து வரும் கடன் கணக்கு விபரப்படி பிரதிவாதிகள், ரூ.5,23,410/– மும், பின்வட்டியும் செலுத்த கடமைப்பட்டவர்கள் என்றும், பிரதிவாதிகள் கடனை பெற்று அதன் பலனை அடைந்து பிறகு கடனை செலுத்தாமல் காலம் கடத்தி வருகிறார்கள் என்றும், வாதி வங்கி பிரதிவாதிகளை பலதடவை நேரில் கடனை செலுத்தும்படி கேட்டு வந்தும் பிரதிவாதிகள் தாவா கடனை செலுத்தாமல் காலம் கடத்தி வந்தார்கள் என்றும், எனவே பிரதிவாதிகள் திரும்ப செலுத்த வேண்டிய மேற்படி கடன் பாக்கி தொகையை பின்வட்டி, செலவுத் தொகையுடன் வசூலிக்க வேண்டி வாதி வங்கியால் தாவா தாக்கல் என்றும் கூறப்பட்டுள்ளது.

**3) 2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்:-**

இந்த பிரதிவாதி ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர இதர சங்கதிகளை வாதியே நிரூபிக்க வேண்டும் என்றும் 04.09.2015 அன்று கல்விக்கடன் கேட்டு 1, 2 பிரதிவாதிகள் வாதி வங்கியில் மனு செய்ததாக கூறியுள்ளது ஒப்புக் கொள்ளப்படுகிறது என்றும் வாதி வங்கி ரூ.2,16,000/– கடன் கொடுக்க சம்மதித்து 04.09.2015 அன்று ஒப்பந்தம் ஏற்பட்டதாக கூறியுள்ளது உண்மை என்றும் 04.09.2015 தேதியில் பிரதிவாதிகளுக்கு ரூ.2,16,000/– கடன் வழங்கியதாகவும் அதற்கு 11.40% வட்டி செலுத்துவதாக ஒப்புக்கொண்டதாக கூறியுள்ளதை வாதியே நிரூபிக்க வேண்டும் என்றும் 04.09.2015ல் கடன் பெற்று 10 ஆண்டுகள் ஆகிவிட்டது என்பதால் இந்த வழக்கு காலாவதி தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் வாதி வங்கி ஆவணங்களை மோசடியாக உற்பத்தி செய்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றும் கூறப்பட்டுள்ளது.

**4) வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையை பரிசீலனை செய்து வழக்கின் தீர்வுக்காக கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன:-**

1. Whether the Plaintiff is entitled to the suit amount as prayed for ?
2. To what other relief the Plaintiff is entitled for ?

**5)** இவ்வழக்கு விசாரணையின் போது வாதி வங்கி தரப்பில் வாதி வங்கியின் கிளை மேலாளர் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் முன்னிடப்படவில்லை.

6) எழுவினா 1 – ன் தீர்வு:-

இந்த வழக்கில் வாதி தரப்பில் 1ம் பிரதிவாதியின் கல்விக்காக பிரதிவாதிகள் கல்வி கடனாக ரூ.2,16,000/– வாதி வங்கியில் பெற்றுள்ளார்கள் என்றும், ஆனால் பிரதிவாதிகள் கடன் ஒப்பந்தப்படி கடனை வாதி வங்கிக்கு திரும்ப செலுத்தவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. 2ம் பிரதிவாதி தரப்பில் பிராதில் சொல்லியுள்ள சங்கதிகளை வாதியே நிரூபிக்க வேண்டும் என்றும் இந்த வழக்கு காலம் கடந்து காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த வழக்கு காலவரையறை சட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு பிரதிவாதிகள் தரப்பில் இந்த வழக்கு காலவரையறை சட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளதன் அடிப்படையில் இந்த வழக்கினை பரிசீலனை செய்து பார்க்கின்ற போது வா.சா.ஆ.2 கடன் ஒப்பந்தத்தை பரிசீலனை செய்து பார்க்கின்ற போது 04.09.2015 அன்று கடன் ஒப்பந்தம் பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொடுத்துள்ளது புலனாகிறது. மேலும் வா.சா.ஆ.1 கடன் விண்ணப்பம், வா.சா.ஆ.2 கடன் ஒப்பந்தம், வா.சா.ஆ.3 வங்கி கணக்கு பட்டியல் ஆவணத்தின் படி கடனை திரும்ப செலுத்துவதற்கான தவணை காலம் 84 மாதங்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் பார்க்கின்ற போது இந்த வழக்கு காலவரையறை சட்டத்தினால் பாதிக்கப்படவில்லை என்றே இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. இவ்வாறான நிலையில் பிரதிவாதிகள் வாதி வங்கியில் கல்விக்கடனாக ரூ.2,16,000/- பெற்று திரும்ப செலுத்தவில்லை என்பது வாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்ற அடிப்படையில் இந்த வழக்கினை பரிசீலனை செய்து பார்க்கின்ற போது வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 கடன் விண்ணப்பம் வா.சா.ஆ.2 கடன் ஒப்பந்தம் ஆகிய ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கின்ற போது பிரதிவாதிகள் வாதி

வங்கியில் கல்விக்கடனாக ரூ.2,16,000/- பெற்றுள்ளது புலனாகிறது. மேலும் வா.சா.ஆ.3 வங்கி கணக்கு பட்டியலை பரிசீலனை செய்து பார்க்கின்ற போது பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு தாவா தொகை ரூ.*5,23,410*/- செலுத்த வேண்டியுள்ளது புலனாகிறது. மேலும் பிரதிவாதிகள் வாதி வங்கியில் கல்வி கடன் பெற்றுள்ளார்கள் என்பது பற்றியும் அதனை திரும்ப செலுத்தவில்லை என்பது பற்றியும் வாதி வங்கியின் மேலாளர் வா.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் பிரதிவாதிகள் தரப்பில் வாதியின் வழக்கை பொய்ப்பிக்கும் வகையில் சாட்சியமோ சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தப் படவில்லை. மேற்கண்டவாறு இந்த வழக்கினை பரிசீலனை செய்ததில் வாதி தரப்பு வழக்கு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் மூலமாகவும் வா.சா.1 சாட்சியத்தின் மூலமாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றே இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே வாதி கோரியுள்ள தொகை வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று இந்த எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

**7) எழுவினா எண்.2 :-**

இந்த வழக்கின் தன்மையை பொறுத்து வாதிக்கு வேறு பரிகாரம் ஏதும் கிடைக்கத்தக்கதல்ல என்று இந்த எழுவினாவிற்கு முடிவு காணப்படுகிறது.

முடிவில், வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் தாவா தொகை ரூ.5,23,410/–மும் (ரூபாய் ஐந்து இலட்சத்து இருபத்து மூவாயிரத்து நானூற்று பத்து மட்டும்) அதில் அசல் தொகை ரூ.2,16,000/–க்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து பதினாறாயிரம் மட்டும்) தாவா தாக்கல் செய்த தேதியிலிருந்து தொகை செலுத்தி தீரும் தேதி வரை வருடத்திற்கு 6% பின்வட்டியுடன் செலுத்த வேண்டுமென்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப்பார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

SHUNMUGA KANI
Digitally signed by SHUNMUGA KANI
Date: 2026.04.21 15:36:22 +0500

**சார்பு நீதிபதி**
**மானாமதுரை.**

**வாதி தரப்பு சாட்சியம்:-**

வா.சா.1 – நேதாஜி (கிளை மேலாளர் வாதி வங்கி)

**வாதி தரப்பு சான்றாவணங்கள்:-**

| | |
|---|---|
| வா.சா.ஆ.1 | கடன் விண்ணப்பம் – அசல் |
| வா.சா.ஆ.2 | கடன் ஒப்பந்தம் – அசல் |
| வா.சா.ஆ.3 | வங்கி கணக்கு பட்டியல் – உண்மை நகல் |
| வா.சா.ஆ.4 | மேலாளர் சான்று – அசல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் :-** இல்லை

SHUNMUGA KANI
Digitally signed by SHUNMUGA KANI
Date: 2026.04.21 15:36:29 +0500

**சார்பு நீதிபதி,**
**மானாமதுரை.**